**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09012024-7883

Volume: 9

Issue: 1

Month: July

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.04.2024

Accepted: 10.06.2024

Published: 01.07.2024

Citation:
Lingam, Sharan Suklam Ahtma, and MAR Manonmani Devi. "The Tholkappiyam Simile Elements in Kambaramayanam." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 1, 2024, pp. 18–25.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i1.7883

*Corresponding Author:
sharansuklam@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Tholkappiyam Simile Elements in Kambaramayanam

**Sharan Suklam Ahtma Lingam**
*Research Scholar, Master of Education (Tamil Language)*
*Sultan Idris Education University, Malaysia*
*http://orcid.org/0000-0002-7934-4206*

**M.A.R. Manonmani Devi**
*Associate Professor, Tamil Language Unit*
*Sultan Idris Education University, Malaysia*
*http://orcid.org/0000-0002-4058-1407*

**Abstract**

*This study focuses on identifying the types of similes used in the epic Kambaramayanam. The research is based on the principles of similes defined in the Porulathikaaram section of the ancient grammar work, Tholkappiyam. With the aid of these principles, the verses of Kambaramayanam were analyzed. The research was conducted entirely using a qualitative approach. Necessary data were collected through library research methods, and the obtained data were analyzed to derive the results. The study found that all four basic types of similes defined by Tholkappiyar namely verb-based simile (Vinai Uvamai), usefulness-based simile (Payan Uvamai), structure-based simile (Mei Uvamai), and image-based simile (Uruvuvamai) were present in Kambaramayanam. Two examples for each type of simile were discussed as part of the research findings. The verses of Kambaramayanam were composed by Kambar following the rules of simile as per Tholkappiyam. Since there are some intricate rules within the simile section, these were also illustrated with evidence in this study. Furthermore, it was concluded that understanding the underlying meaning of a simile, rather than just its apparent meaning, is the correct approach to identifying types of similes.*

***Keywords:*** *Tholkaapiyam, Kambaramayanam, Uvamaiyiyal, Similes, Porulathikaram*

## References

1. Aka7aEkaI (2013). KampaIil NI. Vavuniya: Y; Ilakkiya Vammam.
2. Ceyappirakcu, T (2007). KamparmyaGattil AGinalaI. Chennai: Chennai University.
3. Cīṉivācaṉ, R (2000). KamparmyaGam. Chennai: AGiyakam.
4. KamparmyaGam & Rmvatram (1976). Chennai: KampaI Ka;akam.
5. KcikaI, P (2012). Tolkppiyam (E;uttu&Col&Poru7). Chennai: Crat Patippakam.
6. Kuzhanthai, P (2009). Yppatikram. Chennai: Pkmpukr Patippakam.
7. Manonmani Devi, M. A (2019). Tolkppiyat TI Tumika7. Kuala Lumpur: Uma Publications.
8. Naṟṟamiḻ Prakarti (1st ed.)(2017). Kuala Lumpur: Uma Publications.
9. PatmatvaI (2018). Pratiyr Kavitaika7 (Mklamum Uraiyum). Chennai: Kaṟpakam Puttakālayam.
10. Rajakopalaccariyar, K (2015). IlakkaGa Vi7akkam & AGiyiyal. Chennai: KaGGappaI Patippakam.
11. Sivakami, S (2009). Kampaṉ kaḷañciyam, Chennai: International Institute of Tamil Studies.
12. Tamiḻaṇṇal (2009). Tolkppiyam. Madurai: Meenakshi Puthaka Nilayam.
13. Tirunvukkaracu, C (2013). Srī Mat Kampa Rāmāyaṇam, Chennai: Narmat Patippakam.
14. Vairamuttu (2019). Tamiḻāṟṟuppaṭai. Chennai: Tirumaka7 Nilaiyam.
15. Varadarajan, M (2015). Tamiḻ Ilakkiya Varalāṟu, New Delhi: Sahitya Akademi.

# கம்பராமாயணத்தில் தொல்காப்பிய உவமையியல் கூறுகள்

***சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்***
முதுகலை கல்வியியல் ஆய்வாளர்
சுலுதான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா

***மனோன்மணி தேவி அண்ணாமலை***
இணைப்பேராசிரியர் (தமிழ் மொழி)
சுலுதான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா

***ஆய்வுச்சுருக்கம்***
*கம்பராமாயணம் என்ற காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமை வகைகளைக் கண்டறிவதை இந்த ஆய்வு மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கு அடிப்படையாகத் தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பொருளதிகாரத்தில் உவமையியலின் கீழ் இருக்கும் உவமை அணி சார்ந்த நூற்பாக்கள் விளங்கியுள்ளன. இந்நூற்பாக்களின் துணையோடு கம்பராமாயணச் செய்யுள்கள் ஆராயப்பட்டுள்ளன. இவ்ஆய்வு முழுமையாகப் பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குத் தேவையான தரவுகள் சேகரிக்க நூலக ஆய்வு அணுகுமுறையும் அதன்வழி கிடைக்கப் பெற்ற தரவுகளைப் பகுப்பாய்வு முறையில் அணுகி இவ்வாய்வு முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. கம்பராமாயணத்தில் தொல்காப்பியரால் வரையறுக்கப்பட்ட அடிப்படை நான்கு வகை உவமைகளான வினையுவமை, பயனுவமை, மெய்யுவமை, உருவுவமை ஆகிய நான்கும் கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வோர் உவமை வகைகளுக்கு இரு சான்றுகள் முடிவுகளாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. தொல்காப்பிய உவமையியல் நூற்பாக்களின் விதிகளைக் கொண்டு கம்பராமாயணச் செய்யுள்கள் கம்பரால் இயற்றப்பட்டுள்ளன. சில நுணுக்கமான விதிகளும் இந்த உவமையியல் பகுதியில் இருப்பதால் அதற்கும் சான்று வழங்கி விளக்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல், ஒரு செய்யுளில் இடம்பெறும் உவமையின் தெரிபொருளை மட்டும் அறியாது அதன் புதைப்பொருளை அறிந்து வகைப்படுத்தும் வழியே உவமை வகைகளை அறிவதற்குச் சரியான அணுகுமுறை என்று கண்டறியப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *தொல்காப்பியம், கம்பராமாயணம், உவமையியல், உவமை அணி, பொருளதிகாரம்*

## முன்னுரை

கருத்தானது மனத்தில் என்றும் நிலைபெற்று, பிறரிடையே மேற்கோளாக வழங்கவும் நமது வாழ்வியலோடு கடைப்பிடிக்கவும் பழந்தமிழ் இலக்கியக் காலந்தொட்டே பின்பற்றி வருவது செய்யுள் மரபே ஆகும். செய்யுள் என்பதே இப்போது கவிதை, பா என்ற பெயர்களில் படைக்கப்படுகிறது. உரைநடையை விட செய்யுள்நடையே பன்முறை வாசிப்பிற்கும் அதன் பொருளை உணர்ந்து இன்புறுவதற்கும் ஏற்றதாக அமைகின்றது (Kuzhanthai, 2009). மேலும், கவிதையில் ஓசை இனிமையுடன் பொருள் ஆழம் நிறைந்த சொற்களை ஏற்றவாறு கையாளப்படும் உத்திமுறையே அணி என்று வழங்கப்படுகிறது. கவிதையில் குறிப்பிடப்படும் கருத்துகளை வாசகர் எளிமையாகப் புரிந்து கொள்ளவும் தனது வாழ்வியலோடு அப்பொருளைத் தொடர்புபடுத்திப் பார்க்கவும் இந்த உவமை அணி பயனளிக்கிறது (Rajakopalaccariyar, 2015). தமிழுக்குக் கிடைத்த முதன்னூலாக அமைந்த தொல்காப்பியம்

செறிவான இலக்கண விதிகளைக் கொண்ட நூலாகும். எழுத்து, சொல் இலக்கணத்தைத் தாண்டி பொருளிலக்கணம் சொல்லும் இத்தொல்காப்பியத்தில் உவமை அணிகென்று ஒரு தனி இயலே வரையறுக்கப்பட்டுள்ளது. அதனை உவமையியல் என்று அழைக்கின்றனர். அவ்வியலின் முதன்னூற்பாவான,

> **வினை பயன் மெய் உரு என்ற நான்கே**
> **வகை பெற வந்த உவமத் தோற்றம்**
> **(தொல்காப்பியம்: 1222)**

என்ற தொல்காப்பிய நூற்பா கூற்றின் படி, உவமை அணியானது நான்கு வகைப்படுகிறது. அவை, வினை, பயன், மெய், உரு ஆகும். அதாவது, ஒரு பொருளோடு மற்றொரு பொருளை அதன் செயல் குறித்து ஒப்புமை செய்யப்பட்டால், அது வினையுவமையாகவும் பயன் குறித்து ஒப்புமை செய்யப்பட்டால் பயனுவமை என்றும் மெய் அதாவது வடிவம் குறித்து ஒப்புமைப்படுத்துவதை மெய்யுவமையாகவும் ஒரு பொருளின் நிறம், உணர்வு குறித்த ஒப்புமை செய்வதை உருவுவமை என்றும் வழங்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, உவமைகளைக் குறிக்கும் உருபுகளாக மொத்தம் 36 உவம உருபுகள் தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. உருபுகள் ஏதும் ஏற்காமலும் உவமை அணி செய்யுள்களில் இடம்பெறுகிறது. ஒரு பொருளோடு அப்பொருளைவிட உயர்ந்த அல்லது சிறந்த கூறுகளைக் கொண்ட பொருளோடு உவமிக்கப்படுவதே உவமையியலின் இயல்பாகும் (Manonmani Devi, 2019).

## ஆய்விலக்கிய மீள்நோக்கு

> **யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
> **வாள்ளுவர்போல் இளங்கோவைப் போல்**
> **பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை**
> **உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை**
> **(பாரதியார் கவிதைகள், தமிழ்: 2)**

என்பது குலோத்துங்கனின் ஆட்சியில் வாழ்ந்த கம்பரின் கவித்திறனை ஒட்டி சுப்பிரமணிய பாரதி பாடிய வரிகளாகும். கம்பனது கவித்திறனைப் போற்றுவதற்கு அவரது பன்முகத்தன்மையான படைப்பிலக்கியத் திறனைக் கொண்டிருக்கும் சூழலும் காரணமாக அமைந்துள்ளது. உலகியல் அறிவு, உளவியல் அறிவு, தமிழியல் திறன், அழகியல் முதுர்ச்சி, கலையியல் பார்வை, அறவியல் சிந்தனை போன்ற கூறுகளில் இவரது படைப்புகள் அமைக்கப்பட்டதால் இவரைப் பன்முகச் சிந்தனையாளராகக் கொள்கின்றனர், ஆய்வாளர் (Vairamuttu, 2019). இராமாவதாரம் என்ற பெயரில் கம்பர் இயற்றிய படைப்பே பிற்காலத்தில் கம்பராமாயணம் என்று பெயர் மாற்றம் கண்டது. வால்மீகி இராமாயணத்தை முதன்னூலாகக் கொண்டு வழிநூலாகத் தமிழில் இயற்றப்பட்டதே கம்பராமாயணம். கம்பரின் மற்ற படைப்புகளைத் தாண்டி கம்பராமாயணமே அவரது கவித்திறனின் சிறந்த படைப்பாகப் பார்க்கப்படுகிறது. அதிகளவில் விருத்தப்பாக்களில் இயற்றப்பட்ட கம்பராமாயணம் திருவரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது (Varadarajan, 2015).

சென்னைப் பல்கலைக்கழக ஆய்வாளரான த. செயப்பிரகாசுவின் கம்பராமாயணத்தில் அணிநலன் என்ற ஆய்வினை முன்னோடியாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் அணி நூல்களில் வரையறுக்கப்பட்ட பொருளணிகள், சொல்லணிகள், கவிஞரின் மாண்பையும் ஆளுமையும் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அறிய மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வில் அணிகளின் தோற்றம், வளர்ச்சியுடன் அணிகளின் வகைகளும் பொருளணி, சொல்லணி போன்ற கூறுகளில் ஆய்வுகள் கம்பராமாயணத்தை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது. கம்பரின் கவித் திறனை அவர் உவமை அணியைக் கம்பராமாயணத்தில் பயன்படுத்திய வகையில் அறிய முடிகிறது என்பதும் பெருமளவு உவமைகளாகப் பயன்படுத்தப்பட்ட மலை, மேகம், யானை, சிங்கம், புலி, தாமரை, கடல், திங்கள், ஞாயிறு போன்ற இயற்கையை

மையமாகக்கொண்டுபடைக்கப்பட்டவைகளும் சுற்றுச் சூழலையும் அடிப்படையாக வைத்து உவமைகள் உள்ளது என்பது கண்டறியப்பட்ட முடிவாகும் (Ceyappirakcu, 2007).

இவ்வாய்வை மேற்கொள்வதற்குப் பின்னணியாக இருப்பவை, உவமையணிகள் சார்ந்த ஆய்வுகள் இலக்கியங்களில் மேற்கொள்ளும் போது பொதுவாகத் தண்டியலங்கார நூற்பாக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், இவ்வாய்வில் தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதியில் வரையறுக்கப்பட்டுள்ள உவமையியல் கருத்துகளை மையமாகக் கொண்டு அவ்வியலில் வழங்கப்பட்ட நூற்பாக்களின் துணையோடு கம்பராமாயணம் பாக்கள் ஆராயப்பட்டுள்ளன. இன்று வரை பல நுணுக்கமான இலக்கணக் கூறுகளை உள்ளடக்கிய தொல்காப்பிய நூல் காலத்திற்கு ஏற்புடையதாக உள்ளதாகவும் இலக்கியங்களில் உவமை அணிகளை ஆராயக் குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பாக்களையும் கொண்டு மேற்கொள்ளலாம் என்ற வழியையும் புலப்படுத்துகின்றது.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகு முறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நூலக ஆய்விற்கு ஏற்ற நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பகுப்பாய்வுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகள் முழுமையாக நூலக ஆய்வு அணுகுமுறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், தேவைக்கான தரவுகள் முதலில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளின் வழி சேகரிக்கப்பட்டன. பின் சேகரித்த தரவுகளை வாசித்துப் பகுப்பாய்வு செய்து, கம்பராமாயணத்தில் காணப்படும் தொல்காப்பிய உவமையியல் கூறுகளைக் கண்டறிந்து தரவுப் பகுப்பாய்வு செய்து ஆய்வின் முடிவுகளாகக் கண்டறியப்பட்டுள்ளது.

## கம்பராமாயணத்தில் தொல்காப்பிய உவமையியல் கூறுகள்

தொல்காப்பிய நூற்பாவின்படி, உவமையின் வகைகள் நான்கென்று வரையறுக்கப்பட்டுள்ளது. வினையுவமை, பயனுவமை, மெய்யுவமை, உருவுவமை ஆகிய நான்கும் இடம்பெறுவதற்குத் தனித்தனியே காரணங்களும் வேற்றுமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் உவமை வகைகளும் அதற்கேற்ற தனித்தனி உவம உருபுகளுடனும் பயனுடனும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதனைப் பொருளுணர்ந்து வகைப்படுத்துவதே முறையாகும் (Rajakopalaccariyar, 2015).

## கம்பராமாயணத்தில் வினையுவமை

ஒரு வினைச் சார்ந்த ஒப்பீட்டை ஒரு பொருளோடு மற்றொரு பொருளைக் கொண்டு வருணிப்பதே வினையுவமை ஆகும். வினையுவமைக்கென்ற குறிப்பிட்ட உவம உருபுகள் வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது,

***அன்ன ஆங்கு மான இறப்ப***
***என்ன உறழத் தகைய நோக்கொடு***
***கண்ணிய எட்டும் வினைப்பால் உவமை***
***(தொல்காப்பியம்: 1233)***

அதாவது, அப்படி இந்தக் கம்பராமாயணப் பாடலில், வினையுவம உருபுகளாக அன்ன, ஆங்கு, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்குப் போன்ற சொற்கள் இடம்பெறுவது வழக்கமாகும். இதனைத் தவிர்த்தும் சில உருபுகளோடு வினையுவமை தோன்றுகிறது (Kcikal, *2012*). கம்பராமாயணத்தில்,

**வையம்ம மன்உயிர் ஆக,அம் மன்உயிர்**
**உய்யத் தாங்கும் உடல்அன்ன மன்னனுக்**
**கையம் இன்றி அறங்கடவா தருள்**
**மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ**
***(கம்பராமாயணம்: 1423)***

அதாவது, வசிட்ட முனிவர் இராமனுக்கு அரசனின் குணங்களைத் தயரதன் வேண்டுதற்கிணங்க அறிவுரையாக வழங்கும் சூழலில் ஒரு மன்னன் தன் நாட்டு மக்களைப் பூமியில் பூத்த உயிராகவும் அம்மன்னனின்

உடல் அவர்களைத் தாங்கும் மண்ணாகவும் இருத்தல் வேண்டும் என்ற உவமையோடு கூறுவதாக இக்கூற்று அமைந்துள்ளது (Tirunvukkaracu, 2013). ஆனால், இக்கருத்தை உற்று நோக்கினால் இவ்வுவமை மன்னனின் உடலைக் குறிக்காது அவன் மேற்கொள்ளும் ஆட்சி முறையை அதாவது அரசாளும் வினையைக் குறித்துப் பாடப்பட்டதாகும்.

தொடர்ந்து, ஒரே பாடலில் இரு வெவ்வேறு இடங்களில் வினையுவமை கையாளப்பட்டுள்ளது. அப்பாடலானது,

**பிடித்து நல்கு இவ்வுழை என பேதையேன்**
**முடித்தனென் முதல் வாழ்வு என மொய்அழல்**
**கொடிப் படிந்தது என நெடுங்கோள் அரா**
**இடிக்கு டைந்தது என புரண்டேங் கினாள்**

***(கம்பராமாயணம்: 3321)***

முதலில், சீதையின் துயர்நிலையை விளக்கும் இப்பாடலில், "மொய்அழல் கொடிப் படிந்தது என" என்ற அடிகள் தீயானது ஒரு பூங்கொடியை எரிப்பது போலவும் "நெடுங்கோள் அரா இடிக்கு டைந்தது என" என்ற அடிகள் நீண்டு வளர்ந்த பாம்பு இடி சத்ததிற்குத் தனது வலிமை கெட்டுக் கிடந்தது போலவும் சீதை மாரீசனின் சூழ்ச்சியில் மயங்கி இராமன் ஆபத்தில் உள்ளதாக எண்ணி கவலையுறும் போது, அவள் படும் துயரையும் அவளது நிலையையும் உவமையாகப் பாடிய பொருள் கிடைக்கின்றது. இச்சூழலில் அவள்படும் துயரை பூங்கொடியை எரிக்கும் தீயினால் அது வதங்குகின்ற செயலைப் போலவும் இடியிடித்திட பாம்பு பயந்து சுருளும் செயலைச் சார்ந்தும் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது (Cīn̲ivācan̲, *2000*).

### கம்பராமாயணத்தில் பயனுவமை

தொடர்ந்து, பயனுவமை என்பது செய்யுளில் ஒரு பொருளோடு ஒப்பிடப்படும் மற்றொரு பொருள் அதன் பயனோடு ஒத்தியிருத்தல் வேண்டும். ஒரு பொருளின் வழி அது விளைவிக்கும் பயனை முன்னிறுத்தி ஓர் உவமை அமைவதே பயனுவமை என்றாகிறது. தொல்காப்பியத்தில்,

**எள்ள விழையப் புல்லப் பொருவக்**
**கள்ள மதிப்ப வெல்ல வீழ**
**என்றாங் கெட்டே பயனிலை உவமம்**

***(தொல்காப்பியம்: 1235)***

என்ற இந்த நூற்பா கூறுவதாவது எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ ஆகிய எட்டுச் சொற்களே பயனிலையைக் குறிக்கும் அதாவது பயனுவமையைக் குறிக்கும் பொது உருபுகளாகும். இதனைத் தவிர்த்தும் சில உருபுகளோடு பயனுவமை தோன்றுகிறது (Tamil̲an̲n̲al, *2009*). கம்பராமாயணத்தில்,

**மாண்ட இல் இழந்து அயரும் நான் வழி**
**தனை வணங்கி**
**வேண்ட இல்லை என்றொ ளித்ததாம்**
**என மனம் வெதும்பி**
**நீண்ட வில்லுடை நெடுங் கனல்**
**உயிர்ப்பொடும் நெடுநாண்**
**பூண்ட வில் எனக் குனிந்தன கொழுங்**
**கடைப் புருவம்**

***(கம்பராமாயணம்: 6596)***

என்ற இப்பாடலில், "நீண்ட வில்லுடை நெடுங் கனல் உயிர்ப்பொடும்" என்ற அடிகளில் நீண்ட ஒளியை உடைய நெருப்பின் வழி கிடைக்கும் பயனாக அமையும் சூடு காற்றைப் போன்று இராமன் சினத்தால் பெருமூச்சு விடுவதைப் பற்றிய உவமையாக இந்தப் பயனுவமைப் பொருள் தென்படுகிறது (Cīn̲ivācan̲, *2000*). அதனைத் தொடர்ந்து,

**வீடணக் குரிசில் மற்றை வெங் கதிர்ச் சி**
**றுவன் வெற்றிக்**
**கோடு அணை குன்றம் ஏறி கொண்டல்**
**தேர் மருங்கு செல்ல**
**தோடு அணை மவுலிச் செங் கண் வாலி**
**சேய் தூசி செல்ல**
**சேடனைப் பொருவும் வீர மாருதி பின்பு**
**சென்றான்**

***(கம்பராமாயணம்: 10293)***

என்ற பாடலில், கொண்டல் என்ற சொல்லின் பொருள் மழை மேகம் என்று குறிப்பிடப்படுகிறது. "கொண்டல் தேர் மருங்கு செல்ல" என்ற அடியில் மழை மேக

வண்ணனின் தேருக்கு அருகில் செல்ல என்ற பொருள் தென்படுகிறது. மழை மேகக் கரிய நிறத்தின் பயனைத் தரும் இராமனை முகில் வண்ணன் என்றழைப்பதுண்டு. இதனால், மழை மேகத்தைப் போல் கரிய நிறத்தின் பயனைக் கொண்ட வண்ணன் என்ற பொருளில் இவ்வுவமை பயனுவமை அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது. ஒரு பொருளை மற்றொரு பொருளால் கிடைக்கப்பெறும் பயனோடு ஒப்பிடப்பட்ட உவமைகள் கம்பராமாயணத்தில் குறைவாகவே தென்பட்டது (C+IivcaI, *2000).*

**கம்பராமாயணத்தில் மெய்யுவமை**

மெய்யுவமை என்பது ஒரு பொருளின் வடிவத்தை மற்றொரு பொருளின் வடிவத்தோடு உவமைப்படுத்தும் வகையாகும். ஒரு பொருளின் பண்பில், அதன் வடிவம் சார்ந்து ஒப்புமை நோக்கும் அனைத்தும் மெய்யுவமை ஆகும். மெய் என்றால் உடல் அல்லது தோற்றம் என பொருள்படுகிறது. ஆக, தோற்றம், வெளிப்புறம் சார்ந்த பண்பை ஒப்புமை நோக்க மெய்யுவமை பயன்படுத்தபடுகிறது (Manonmani Devi, 2019). இதற்கும் சில குறிப்பிட்ட உவம உருபுகள் காணப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியத்தில்,

**கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய**
**ஒட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்ப வென்று**
**அப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்**
***(தொல்காப்பியம்: 1236)***

என்ற நூற்பா விளக்குவதாவது, கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட்ட, நிகர்ப்ப என்ற எட்டுச் சொல்லும் மெய்யுவமத்திற்கென்ற குறிப்பிட்ட உவம உருபுகளாகும். இதனைத் தவிர்த்தும் சில உருபுகளோடு மெய்யுவமை தோன்றுகிறது (Kēcikaṉ, 2012). இந்த மெய்யுவமை வகை கம்பராமாயணத்தில்,

**முன்னே நெடு முடி மன்னவன்**
**முறையில் செல. மிதிலை**
**நன் மாநகர் உறைவார் மனம்**
**நனி பின்செல. நடுவே.**
**தன் ஏர்புரை தரு தம்பியர்**
**தழுவிச் செல, மழைவாய்**
**மின்னே புரை இடையாளொடும்.**
**இனி தேகினன் வீரன்.**
***(கம்பராமாயணம்: 1266)***

அதாவது, சீதையை மணந்த இராமன் தன் தம்பிகளுடனும் சீதையுடனும் அயோத்திக்குத் திரும்பும் போது, தயரதன் முன் செல்ல இராமனும் சீதையும் அவரைத் தொடர்ந்து செல்கின்றனர். இங்கே, சீதையின் மெல்லிடையை மின்னலுக்கு ஒப்பாக வைத்துப் பாடியுள்ளார் கம்பர். மின்னல் மேகத்தில் எழும்போது இங்கிருந்து பார்க்க மெல்லிய கோடாகத் தெரியும் அது போலச் சீதையின் இடை மிகச் சிறியதாக இருப்பதாக அவ்வருணனை இடம்பெற்றுள்ளது (Cīṉivācaṉ, 2000). இது போலக் கம்பர், சீதையின் இடையைப் பல பாடல்களில் பல பொருட்களோடு உவமைப்படுத்தியுள்ளார் (Cīṉivācaṉ, 2000). தொடர்ந்து,

**ஊழியின் இறுதி காணும் வலியினது**
**உயர் பொன் தேரின்**
**ஏழ் உயர் மதமா அன்ன**
**இலக்குவன் கவிகை ஏந்த**
**பாழிய மற்றைத் தம்பி**
**பால்நிறக் கவரி பற்ற**
**பூழியை அடக்கும் கண்ணீர்ப்**
**பரதன்கோல் கொள்ளப் போனான்.**
***(கம்பராமாயணம்: 10292)***

இப்பாடலில், "ஏழுயர் மதமா அன்ன இலக்குவன்" என்ற அடியில் கம்பர் இராமனின் தம்பியான இலக்குவனின் தோற்றத்தை ஏழு முழ உயரம் கொண்ட யானையின் தோற்றத்தோடு ஒப்பிடுகிறார் (Tirunvukkaracu, *2013).* அவனது உடல் எவ்வகையான அளவைக் கொண்டுள்ளது என்பதை ஏழு முழ உயர யானையின் உயரத்தோடு ஒத்தியிருக்கும் பண்பால் காணப்படுவதாகக் காட்டுகின்றது இப்பாடல். இதில் "அன்ன" என்ற உவம உருபு வருவதால் இது வினையுவமையாகக் கொள்வது தவறாகும்.

அன்ன உருபு மற்ற பொருள்களிலும் தோன்றும் என்று தொல்காப்பியர்,

**அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்.**
***(தொல்காப்பியம்: 1234)***

என்ற அடியில் குறிப்பிடுகிறார். அதாவது "அன்ன" என்ற சொல் வினையுவமை அல்லாத மற்ற பொருள் உணர்த்தவும் பயன்படும் என்று வரையறுத்துள்ளார் தொல்காப்பியர்.

**கம்பராமாயணத்தில் உருவுவமை**

உருவுவமை எனப்படுவது, ஒரு பொருளின் நிறம் அல்லது உணர்வை மற்றொரு பொருளின் நிறம் அல்லது உணர்வோடு ஒப்புமைப்படுத்துவது ஆகும். ஒரு பொருளின் பண்பில் நிறமும் உணர்வும் சில வேளைகளில் ஒத்தியிருக்கும் தன்மை கொண்டதாகும். அதனால்தான் பண்பு சார்ந்த உவமைகளை மெய்யுவமை, உருவுவமை என இரண்டாகப் பிரித்துள்ளனர் (Manonmani Devi, 2019). இந்த உருவுவமைக்கென்ற எட்டுத் தனி உருபுகளும் மற்ற வகைகளைப் போல உள்ளன. தொல்காப்பிய நூற்பாவான,

**போல மறுப்ப ஒப்பக் காய்த்த**
**நேர வியப்ப நளிய நந்த என்று**
**ஒத்து வரு கிளவி உருவின் உவமம்**
***(தொல்காப்பியம்: 1237)***

என்ற அடிகள், வண்ண, உணர்வை விளக்கும் உவம உருபுகளான இவ்வெட்டும் போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த என்ற சொற்களில் பொதுவாகத் தோன்றும் தன்மை உடையது ஆகும். இதனைத் தவிர்த்தும் சில உருபுகளோடு மெய்யுவமை தோன்றுகிறது (Tamilannal, 2009). இந்த உருவுவமை கம்பராமாயணத்தில்,

**நிருதியின் திசையில் தோன்றும்**
**நந்தியம்பதியை நீங்கி**
**குருதி கொப்பளிக்கும் வேலோன்**
**கொடி மதில் அயோத்தி மேவ**
**சுருதி ஒத்தனைய வெள்ளைத்**
**துரகதக் குலங்கள் பூண்டு**
**பருதி ஒத்திலங்கும் பைம் பூண்**
**பரு மணித் தேரின் ஆனான்.**
***(கம்பராமாயணம்: 10291)***

என்ற பாடலில் இடம்பெறுகிறது, "பருதி ஒத்திலங்கும் பைம்பூண் பருமணித் தேரின் ஆனான்" என்ற அடியில் பருதி என்ற சொல் பரிதி எனப்படும் சூரியனைக் குறிக்கிறது. அப்படி சூரியனைக் குறிக்கும் இச்சொல் சூரியனின் நிறமான பசும் பொன்னிறத்தை இராமனது தேரில் அலங்கரிக்கப்பட்ட மணிகளின் நிறமாக உவமைப்படுத்தப்பட்டுள்ளது (Cīṉivācaṉ, 2000). இங்கே பொன்னிற மணிகளின் நிறப் பண்போடு கதிரவனின் நிறம் புறப்பொருள் உவமையாகப் பயன்படுத்தப்பட்டது போல், உருவுவமையில் வரையறுக்கப்பட்ட உணர்வு சார்ந்த அகப்பொருளை விளக்க,

**தன் மக்களும். மருமக்களும்**
**நனி தன் கழல் தழுவ**
**மன் மக்களும். அயல் மக்களும்**
**வயின் மொய்த்திட மிதிலைத்**
**தொல் மக்கள்தம் மனம் உக்குயிர்**
**பிரிவு என்பது ஓர் துயரின்**
**வன்மைக் கடல் புக உய்ப்ப தோர்**
**வழி புக்கனன் மறவோன்**
***(கம்பராமாயணம்: 1265)***

என்ற பாடலில் தோன்றும், "தொல் மக்கள் தம் மனம் உக்கு. உயிர் பிரிவு என்பது ஓர் துயரின், வன்மைக் கடல் புக." என்ற அடிகள் சீதை மிதிலை நாட்டை விட்டுத் திருமணமாகி இராமனுடன் செல்லும் காட்சியைக் கண்ட அந்நாட்டுப் பெரியோர் யாவும் மனம் நெகிழ்ந்து உயிர் உடலை விட்டுப் பிரியும் போது ஏற்படும் துயரைப் போன்ற துக்கக் கடலில் ஆழ்ந்திருந்தனர் என்ற பொருளில் பாடப்பட்டுள்ளது (Cīṉivācaṉ, 2000). இதில் துன்பம் எனும் உணர்வானது, இளவரசி ஒரு நாட்டை விட்டுப் போகும் பிரிவின் துயரோடு ஓர் உயிரானது தனது உடலை விட்டு நீங்கும் துக்கத்திற்கு இணையாக ஒப்புமை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒருவிதத் துன்ப உணர்வை மற்றொரு வகைத் துன்ப உணர்வோடு ஒப்புமை செய்யப்பட்ட உவமை உருவுவமையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## உவமை வகைகளைப் பிரித்தலில் ஏற்படும் சிக்கலும் களையும் வழியும்

ஒரு கவிதையில் காணப்படும் ஒரு சொல்லின் பொருளைச் சூழலை நோக்கித் தெளிவு பெறுவது போலச் செய்யுளில் இடம்பெறும் உவமைகளைச் சொல்லோடு வைத்துச் சிந்திக்காமல் அதன் சூழலையும் சொல்ல வரும் பொருளையும் விளங்கிக் கொள்ளும் போதே அதன் உண்மையான உவமை வகை தென்படுகிறது.

**மேவலாம் தகைமைத் தல்லால்**
**வேழவில் தடக்கை வீரற்**
**கேயெலாம் காட்டு கின்ற**
**இணைநெடுங் கண்ஓர் ஏழை**
**பாவைமார் பரந்த கோலப்**
**பண்ணையில் பொலிவாள் வண்ணப்**
**பூவெலாம் மலர்ந்த பொய்கைத்**
**தாமரை பொலிவ தொத்தாள்**
**(கம்பராமாயணம்: 943)**

என்ற இப்பாடலில், சீதையின் அழகிற்கு அழகு சேர்ப்பது போல் தோழிகள் அவளை அலங்காரம் செய்து அமர்த்திட அவர்களுக்கு நடுவில் சீதை வண்ணப் பூவெல்லாம் மலர்ந்திருக்கும் பொய்கையில் அரசியாக வீற்றிருக்கும் தாமரையைப் போல் மிளிர்கிறாள் என்ற பொருளில் பாடப்பட்டுள்ளது (Cīṉivācaṉ, 2000). இதை மேலோட்டமாகப் பார்த்தால் அரசி என்னும் தொழில் செய்யும் செயலைச் சீதை புரிவதாக விளங்கும். தாமரையானது மலர்களுள் அரசியாக இருப்பது போல் சீதை அங்கே அரசியைப் போல் அமர்ந்திருந்தாள் என்று பொருள் கொள்வது தவறாகும். ஏனென்றால் இங்கே செய்யும் தொழிலை அதாவது வினையைச் சார்ந்து இவ்வுவமை அமையவில்லை தாமரையைப் போன்ற அழகு எந்தப் பூவிற்கும் இல்லை என்றும் அதுபோலச் சீதையும் பேரழகோடு விளங்குகிறாள் என்ற புதைப்பொருளோடு ஆராய வேண்டும். எனவே, இது மெய்யுவமை வகையில் எழுதப்பட்ட பொருளாகும்.

## நிறைவுரை

கம்பராமாயணக் காப்பியத்தில், பாடப்பட்ட பல பாடல்களில் உவமைகள் அதிகமாகவே கையாளப்பட்டுள்ளன. குறிப்பாக ஒரு பொருளைப் பற்றி மேலும் விளக்க அதன் ஒத்த தன்மையுடைய வேறொரு உயர்ந்த பொருளோடு ஒப்புமை நோக்கப்பட்டுள்ளது. இப்படி உயர்ந்த பொருளோடு மட்டுமே உவமப்படுத்தப்படும் முறையைத் தொல்காப்பியத்திலும் காணமுடிகிறது. கம்பரது இக்காப்பியத்தில் உவமையாகப் பாடப்பட்ட பொருள்களில் பலவும் இயற்கையைச் சார்ந்த உயிரினங்கள், சுற்றுச் சூழலாகவே அமைந்துள்ளது. இதன் வழி, கம்பராமாயணச் செய்யுள்களை வாசித்துப் புரிந்து கொள்ளவும் அதன் பொருளை அறியவும் இந்த உவமை அணி துணைப்புரிகிறது. அதோடு மட்டுமல்லாமல், ஒரு செய்யுளில் இடம்பெறும் உவமையின் தெரிபொருளை மட்டும் அறிந்து அவை எந்த வகையென்று பிரிக்காது அதன் புதைப்பொருளை அறிந்து அதன் வகையை முடிவு செய்வதால் வாசகர் மத்தியில் கம்பராமாயணப் பாடலுடன் தொல்காப்பிய உவமையியல் கூறுகளையும் எளிமையாக விளங்கச் செய்ய முடியும்.

## துணைநூற் பட்டியல்


1. இராஜகோபாலாச்சாரியார், க. (2015). இலக்கண விளக்கம் - அணியியல். சென்னை: கண்ணப்பன் பதிப்பகம்.
2. தமிழண்ணல். (2009). தொல்காப்பியம். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
3. தமிழண்ணல். (2010). தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல், உவமையியல் (தொகு. 3). மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
4. மனோன்மணி தேவி. (2017). இலக்கண ஆய்வில் ஒரு துமி. காஜாங்கு: My Story Enterprise.
5. மனோன்மணி தேவி. (2019). தொல்காப்பியத் தேன் துமிகள். கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.